# Anode Fabricators Pvt Ltd

Innovation In Inert Metals

MMO, Platinized Ti & Nb Anodes



#48, Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 22781149/1150 Fax: 22781362 Email: info@tianode.com Web: www.tianode.com


## Inter-Organizational News Letter – February 06

### MAN OF THE MONTH



**MR. T. AMALADHAS**
**Manager – Plating**
Hardworking

### FORECASTING 05-06

| | |
|---|---|
| Turnover | : 125% ↑ |
| Employment | : 25% ↑ |
| Profitability | : 100% ↑ |
| Modernization | : in coating Plant → |
| Rejection growth | : 100% ↓ |

### TESTIMONIALS

**Customers:**

| | |
|---|---|
| Up to November 05 | : 155 Nos |
| Up to December 05 | : 160 Nos |

**Performance: Dec 05**

| | |
|---|---|
| Turnover growth | : 89.35% |
| Employment growth | : 04.41% ↓ |
| 100% Attendance | : 06.15 % |


### MANAGEMENT

Ms. P.E. Nancy – Director
Mrs. J. Vanajambika – Director

### KEY PERSONS

| | |
|---|---|
| Mr. M.P.V. Jeyakumar | - CEO. |
| Mr. R. Vijaya Sai | - Operation |
| Mr. M. Suyambu | - ECU |
| Mr. T. Amaladhas | - Plating. |
| Mr. T. Ramesh | - Purchase. |
| Mr. N. Murugan | - Production. |
| Mr. RM. Ravi Chandran | - Marketing. |
| Mr. C. Sounder Suresh | - Stores. |
| Mr. R. Ramarajan | - Accounts |

### ACHIEVEMENT




## நூற்றுக்கு நூறு!

"இப்ப எழுதின பரிட்சையில் நீ, எவ்வளவு மார்க் வாங்குவாய்?" என்று சில மாணவர்களைக் கேட்கிறோம். அதற்கு சிலர், "நூற்றுக்கு எழுபது அல்லது எண்பது" என்று சொல்வார்கள். வேறு சிலர், பெருமையாக 90 வாங்குவேன்" என்றும் சொல்லலாம். "அட! தொண்ணூறா!" ஏன் பத்து மார்க் குறைகிறது?" என்று கேட்பது இன்னொரு முறை. அப்படியும் கேட்கலாம் தான். காரணம், வேறு சில மாணவர்கள், நூற்றுக்கு நூறு வாங்கத்தானே செய்கிறார்கள்.

அது இருக்கட்டும். மதிப்பெண் வாங்குவது உதாரணம்தான். சொல்லவந்தது வேறு. நூற்றுக்கு 90 என்பது பெரும்பாலோரால் "பலே, நல்ல மார்க்" என்று சொல்ல வைக்கும் மதிப்பெண்தான். இதே நூற்றுக்கு தொண்ணூறு சதவிகிதம் என்பதை மற்ற எல்லா இடங்களிலும் ஒப்புக்கொள்வோமா? தினம் நாலு வீதம் ஒரு மாதத்தில் நமக்கு மொத்தம் நூறு கடிதங்கள் வருகின்றன என்று வைத்துக்கொள்வோம். அதில் எத்தனை கடிதங்களை, நமது 'போஸ்ட்மேன்' சரியானபடி நம்மிடம் எடுத்துவந்து தரவேண்டும் என்று எதிர்பார்ப்போம்? நூற்றுக்கு தொண்ணூறு போதுமா? அப்படியென்றால், அது சரிதான் என்றால், நமக்கு வரவேண்டியதில் பத்து கடிதங்கள் வரை, வராமல் போகலாம். அப்படித்தானே!

பெரிய மருத்துவமனைகள் இருக்கின்றன. அங்கே உயிருக்குப் போராடும் பல நோயாளிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. அதில் நூற்றுக்கு எத்தனை பேர் நல்லபடியாகப் பிழைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்போம்? தொண்ணூறு சதவிகிதம் போதுமா? அல்லது ஒருவர் விடாமல், அனைவரும் பிழைக்க வேண்டும் என்றா?

சென்னை, கோவை போன்ற பெருநகரங்களில் லட்சக்கணக்கானவர்களுக்கு பால் பேக்கட்டுகள், விநியோகம் செய்யப்படுகின்றன. அதில் 10 சதவிகிதமென்பதே எத்தனையோ ஆயிரம் பேக்கட்டுகள். பத்து சதவிகிதம் வரை கெட்டுப்போய்விட்டால் பரவாயில்லை என்று ஏற்றுக் கொள்வார்களா?

ஆக, பல இடங்களில் 90 சதவிகிதம் என்பது கூட, போதாதது தான். 'அட பரவாயில்லையே!' ரகம் இல்லை, "அடச்சே!" ரகம்தான். தாளமுடியாது. விமான சர்விஸ்களை எடுத்துக்கொண்டால், கிளம்பிப் பறக்கும் அத்தனை விமானங்களும் சரியாகத்தானே கீழிறங்க வேண்டும். இதில் எல்லாம் நாம் எதிர்பார்ப்பது 'சென்டம்'. நூற்றுக்கு நூறு தானே!

நூற்றுக்கு நூறு என்றால், சும்மா இல்லை. எத்தனை முறை செய்யப்படுகிறதோ, அத்துனை முறையும் மிகச்சரியாவே செய்வது. இது சாத்தியமா? சாத்தியம்தான்.

********

## கருணை

குளத்தில் குளித்த சிறுவனின் கால்களை முதலை கவ்வியது. அலறிய மகனின் குரல் கேட்டு அவனுடைய தாய் அவன் கைகளைப் பற்றி இழுத்தார். இந்தப்போராட்டத்தில் முதலையின் பிடியில் கால்கள் காயமாக, தாய் இழுத்ததில் கைகளில் காயம் ஏற்ப்பட்டன. ஒருவர் ஓடிவந்து முதலையை துப்பாக்கியால் சுட்டு சிறுவனை மீட்டார். அவன் கால்களில் ஒன்று அகற்றப்பட வேண்டி வந்தது.

... 2

## FUNCTIONAL WISHES



**MUHARRAM – FEBRUARY 10**

Best Wishes by Ti Employees.

## EXTERNAL SUPPORT

Banking : M/s. United Bank of India Ltd
Auditing : M/s. Nisar & Kumar
AQ Auditing : M/s. Juran Quality
Legal Advisers : 1] Lr. M.K. Govindan.
2] Lr. V. Benedict Vincent.
Software : M/s. IndSys Technologies
Central Excise Adviser: Mr. Raghavan

## இளைய தலைமுறை


இன்றைய இளைய தலைமுறையின் இதயத்தில் இலட்சிய விதைகளைத் தூவுவதில் அதிக அக்கறை காட்டுகிறார் ஷிவ்கெரா. "இன்றைய மக்கள் தொகையில் 100% இளைஞர்கள் அல்லர். ஆனால், நம் 100% எதிர்காலம், இளைஞர்கள்தான்" என்கிறார் அவர்.

தொழில் வெற்றியை எட்டிட மனித உறவுகள் எவ்வளவு மகத்தான இடத்தை வகிக்கின்றன என்பதை விளக்குகிறார் ஷிவ்கெரா. எவ்வளவோ பெரிய திறமையாளர்கள் கூட மக்கள் தொடர்பு சரிவர அமையாததாலேயே சிக்கலான பின்னடைவுகளைக் காண்கிறார்கள். இது, திறமை வாய்ந்த தொழில் உலகத்தில் ஒரு சவாலாகவே திகழ்கிறது.

இதற்கான காரணத்தைக் கண்டறிந்து சொல்கிறார் ஷிவ்கெரா. "நம்முடன் பிறர் ஏன் தொடர்பு கொள்கிறார்கள்? நம் திறமையை மட்டும் அடிப்படையாக வைத்து அவர்கள் பழகுவதில்லை. நம்முடன் பழகுவது அவர்களுக்கு உகந்ததாகவும் உறுத்தலில்லாமலும் இருக்கிறதா என்று பார்த்துத்தான் பழகுகிறார்கள்" என்கிறார் அவர்.

– நமது நம்பிக்கை

## BIRTH DAY WISHES



Mr. C. Sounder Suresh
Out sourcing
February 02

Mr. N. Aghoram
F/o. A. Nirmala
February 08

Mrs. A. Glory
W/o. T. Amaladhas
February 14

Master R. Hemnath
S/o. R. Jayanthi
February 25

Master S.V. Edwin Jeyakumar
S/o. C. Sounder Suresh
February 26

**எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே!**
**அவர் நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பினிலே!!**

**Best Wishes by Ti Employees.**

சிறுவன் சிரித்தபடி சொன்னான், "கால் இழந்தது பற்றிக் கவலையில்லை. என் தாய் இழுத்ததில், என் கைகளில் ஏற்பட்ட காயம், கடவுளுக்கு என் மேல் இருக்கிற அக்கறைக்கு அடையாளம். அந்தக் காயத்தின் தழும்பு கடவுள் இருப்பதைக் காலமெல்லாம் நினைவுபடுத்தும்" என்றான்.

கருணை சில நேரம் காயமாகக் கூட வெளிப்படலாம்.

********

## அன்பின் வெளிப்பாடு

பள்ளி ஆசிரியர், குழந்தைகளிடம் "உங்கள் அன்பை வெளிப்படுத்தும் விதமாக யாரேனும் ஒருவருக்கு ஒரு ரோஜாவைக் கொடுங்கள்" என்றார். பள்ளியிலிருந்து வீட்டில் தன்னைக் காரில் இறக்கிவிட்ட செல்வந்தர் ஒருவரிடம் ஒரு குழந்தை ரோஜாவைக் கொடுத்தது. அவர் வீடு சென்றார். தன் வளர்ந்த மகனிடம் ரோஜாவைத் தந்தார். அவன் கதறிக் கொண்டே அவரைக் கட்டியணைத்தான்.

"உங்கள் வேலைகளுக்கு நடுவில் என்னை கவனிப்பதே கிடையாது. என்னை வெறுக்கிறீர்கள் என்று நினைத்து, தற்கொலைக்கு தயாராகிக் கொண்டிருந்தேன். உங்கள் அன்புக்கு நன்றி" என்றான்.

சின்னஞ்சிறியதாய் இருந்தாலும் அன்பின் வெளிப்பாடு அற்புதங்களை நிகழ்த்தும்.

********

## உங்களுக்குத் தெரியுமா?

- ஒரு சொட்டு ரத்தத்தில் 50 லட்சம் ரத்த சிவப்பு அணுக்கள் உள்ளன.
- ரத்த சிவப்பு அணுக்களின் ஆயுள் 4 மாதங்கள்.
- ஒரு சுழற்சியில் ரத்தம் பயணம் செய்யும் தூரம் 1 லட்சத்து 19 ஆயிரம் கிலோமீட்டர்.
- ரத்தக் குழாய்க்குள் செல்லும்போது ரத்தத்தின் வேகம் 62 கிலோமீட்டர்
- 24 மணிநேரத்தில் சுழற்சி முறையில் 1,700 லிட்டர் ரத்தத்தை சிறுநீரகங்கள் சுத்திகரிப்பு செய்கின்றது. இதில் ஒன்றரை லிட்டர் சிறுநீரை அவை வெளியேற்றுகிறது.
- ஒரு ஆணின் உடலில் ஒரு கிலோகிராம் எடைக்கு 66 மில்லிலிட்டர் ரத்தம் உள்ளது.

********

## OOTY TOUR



**சிறுகதைகள், துணுக்குகள் கவிதைகள், கட்டுரைகள் பணியாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.**
**– Editor –**